## இனிமையான குழந்தைகளே! எதுவரை சத்யுக சுயராஜ்யம் ஸ்தாபனை ஆகவில்லையோ அதுவரை சுகமான தூக்கம் தூங்கமாட்டோம், பவித்திரமாகி அனைவரையும் பவித்திரமாக்குவோம் என சபதம் செய்யுங்கள்

கேள்வி: டிராமாவில் எப்படிப்பட்ட மரணம் நிகழ்வது கூட சங்கமயுகத்தில் வழக்கமாகி இருக்கிறது?

பதில்: விஜய (வெற்றி) மாலையில் வருவதற்கு முயற்சி செய்யக்கூடிய நல்ல நல்ல குழந்தை கள் கூட ஆச்சரியத்துடன், கேட்பவர்களாகி, பிறருக்கு கூறுபவர்களாகி, பிறகு ஓடியும் விடுகிறார் கள்; அதாவது மரணம் அடைந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட மரணம் கூட சங்கமயுகத்தில் பழக்கமாகி விட்டது. ஸ்ரீமத்படி நடக்காவிடில் மாயா தோற்கடித்து விடுகிறது. பாபாவுக்கு சொந்தமாகி, கையை விட்டால் இறப்பதுபோல ஆகிவிடுகிறது. அதிர்ஷ்டத்தின் மேல் கோடு (துரதிர்ஷ்ட) விழுந்து விடுகிறது.

பாடல்: வாசலில் வந்துள்ளோம், சபதம் செய்து கொண்டு.....

ஓம் சாந்தி இனிமையிலும் இனிமையான, உயிருடன் வாழ்ந்து கொண்டே இறக்கக்கூடிய குழந்தைகள் இந்தப் பாட்டைக் கேட்டனர். உயிருடன் வாழ்ந்தபடியே பலியாகி விட்டீர்கள். அனைவரும் பலியாகவில்லை. வரிசைப்படி, முயற்சிக்கு ஏற்றபடி உயிருடன் வாழ்ந்தபடி இறக்கிறார்கள். ஒருவரை மடியில் எடுக்கும் பொழுது அல்லது தத்து எடுக்கும் பொழுது, அவர் ஒரு குடும்பத்தை விட்டு அடுத்த குடும்பத்திற்கு சொந்தமாகி விடுகின்றார். குழந்தைகள் அறிந்திருக்கிறீர்கள், அதாவது நாம் அசுர குடும்பத்தி-ருந்து இறந்து, இப்பொழுது ஈஸ்வரிய குடும்பத்திற்குச் சொந்தமாகிவிட்டோம். ஈஸ்வரரே வந்து நம்மை மடியில் தத்து எடுத்துள்ளார். அஞ்ஞான காலத்தில் எவரும் ஈஸ்வரரால் தத்து எடுக்கப்படுவதில்லை. தர்ம குருமார்களால் தத்து எடுக்கப் படுகின்றார்கள். வல்லபாச்சாரி குலத்தினர் ஸ்ரீ கிருஷ்ணரின் கோவிலில் தன் குழந்தைகளை ஸ்ரீ கிருஷ்ணர் தத்து எடுக்க கொடுத்து விடுகிறார்கள். ஆனால் அது ஜடமான சிலையாகும். ஆகவே பிராமணரான பூஜாரியே (கிருஷ்ணருக்குப் பதிலாக) குழந்தையை தன் மடியில் வைஷ்ணவராக்குவதற்காக வைக்கிறார். இப்படி நிறைய பேர் தத்து எடுக்கிறார்கள். யார் யார் இருந்து விட்டு போனார்களோ, அவர்களால் தத்து எடுக்கப்படுகிறோம் என்று குழந்தைகள் அறிந்திருக்கிறீர்கள். சிலர் கிறிஸ்துவால் தத்து எடுக்கப்படுகிறார்கள். சிலர் இப்ராஹிமால் தத்து எடுக்கப்படுகிறார்கள். அவர்கள் இருந்து விட்டு சென்றார்கள், அவர்கள் மீண்டும் வருவார்கள், இதை எல்லாம் குழந்தைகள் மட்டும் அறிவீர்கள். இப்பொழுது நீங்கள் உயிருடன் வாழ்ந்து கொண்டு இறந்து விட்டீர்கள். ஆகவே நீங்கள் ஒரு பாபாவின் நினைவில் வாழ வேண்டும். உலகீய தந்தையின் மடியில் அவரது குழந்தைகள் வருகிறார்கள், தந்தை இறந்தவுடன், குழந்தைகள் மட்டும் உயிருடன் வாழ்கிறார்கள். நீங்கள் அப்பேற்பட்ட தந்தையின் மடியில் வருகின்றீர்கள், அந்த தந்தை உங்களை அமரலோகத்திற்கு அதாவது துர்கதியிலிருந்து சத்கதிக்கு அழைத்துச் செல்கிறார். மனித குலம் முழுவதுக்கும் சத்கதி வள்ளல் ஒரே ஒருவர் தான். உங்களுக்கு மட்டும் தான் சத்கதி கிடைக்கும் என்பது இல்லை. சத்கதி என்பது அனைவருக்கும் கண்டிப்பாக கிடைக்கிறது. ஆனால் டிராமாவின் திட்டப்படி சிலருக்கு சதோபிரதான சத்கதி,

சிலருக்கு சதோ நிலை, சிலருக்கு ரஜோ நிலை, சிலருக்கு தமோநிலை சத்கதி கிடைக்கிறது. தமோ நிலையில் வந்தபோதிலும் முதன் முதலில் வரும்பொழுது துக்கம் அனுபவிப்பதில்லை. முதன்முதலில் சுகத்தைக் கண்டிப்பாக அனுபவிக்க வேண்டும். போகப் போக கடைசியில் அனைவரும் துக்கம் அனுபவித்தே தீரவேண்டும்.

பாபா கூறுகிறார், சத்கதி வள்ளல், பதீத பாவனர் நான் ஒருவர் தான். முதன் முதலாக எந்த ஆத்மாக்கள் வருவார்களோ, அவர்கள் சுகத்தை அனுபவிப்பார்கள். பிறகு துக்கத்தில் வருகிறார் கள். நீங்களும் உங்கள் முயற்சிக்கு ஏற்ப, சதோபிரதானம் பிறகு சதோ நிலை, ரஜோ நிலை, பிறகு தமோ நிலையில் வருகிறீர்கள். நீங்கள் வரிசைப்படி சத்கதி அடைவீர்கள். முக்கியமாக 8 மணிகள் நினைவு செய்யப்படுகின்றார்கள் இல்லையா? இப்பொழுது நீங்கள் திரௌபதிகள், பாபாவுக்குச் சொந்தமாகி விட்டீர்கள். பிறகு ஒரு பொழுதும் பாபாவை விடக்கூடாது. ஆனால் ஸ்ரீமத்படி நினைவு செய்யாவிடில், மாயா கையை விலக்கி விடும். தத்து எடுக்கப்பட்ட பிறகு ஆரம்பத்தில் நன்றாக வந்தார்கள். நல்ல நல்ல இனிமையான பெரிய குழந்தையாக இருந்தார் கள். அவர்களை வெற்றி மாலையில் 3வது, 4வது நம்பரில் பாபா வைத்திருந்தார். அவர்களும் ஆச்சரியப் படும்படியாக ஓடிவிட்டார்கள். இதுவும் இந்த சங்கமயுகத்தில் உள்ள பழக்க வழக்கம். ஆச்சரியத்துடன் கேட்பவர்கள், புரிய வைப்பவர்கள், பிறகு ஓடிவிடுவார்கள் லி இப்படி நடந்து வரும். பாபா கூறுவார், டிராமாவில் இவருக்கு இப்படி மரணம் வாய்த்தது. பாபாவுக்கு சொந்தமாகி கையை விட்டால் இறந்து விட்டார் என்று அர்த்தம். இருப்பார் இந்த உலகத்தில். ஆனால் உயிருடன் வாழ்ந்து கொண்டு, இங்கிருந்து வெளியேறி அசுர உலகத்திற்குச் சென்று விட்டார். ஏதவாது காரணம் உருவாகி இருக்கும் இல்லையா? அவர்களும் டிராமா என்று கூறுவார்கள். ஆனால் ஸ்ரீமத்படி நடக்காததால், மாயாவிடம் தோற்றுப் போகிறார்கள். அதிர்ஷ்டத்தில் கோடு விழுந்து விடுகிறது. ஈஸ்வரருக்கு சொந்தமாகிவிட்டால் பிறகு ஏற்படும் மாயாவுடன் யுத்தம். மற்றபடி தேவதைகள், அசுரர்களுக்கு இடையில் போர் நடக்கவில்லை. அசுரத்தனமான மாயாவானது வெற்றி பெற்று விடுகிறது.

நல்லது, குழந்தைகள் ராக்கி உற்சவத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதுகிறார்கள். ஒவ்வொரு பண்டிகையிலும் தயாரிப்பு வேலைகளை செய்கிறீர்கள், இல்லையா? ரக்ஷாபந்தன் விழா சமயத்தில் முன்கூட்டி சென்று ராக்கி கட்டுகிறீர்கள். இதனுடைய முழு ரகசியமும் புத்தியில் இருக்க வேண்டும். முதன் முதலில் பிராமணர், பிராமணிகள் ராக்கி கட்டினார்கள். இப்பொழுது சகோதரி சகோதரனுக்கு ராக்கி அணிவிக்கும் பழக்கம் வந்திருக்கிறது. உண்மை யில் பிராமணர் ராக்கி கட்டினார்கள். ஏனென்றால் பிராமண வகுப்பினர் உயர்ந்தவராகவும், சுத்தமாகவும் இருந்ததாகப் பாடப்பட்டிருக்கிறது. உண்மையில் பிராமணர் சன்னியாசிகளை விட உயர்ந்தவர்கள். ஆனால் டிராமாவின்படி இந்த நேரத்தில் சன்னியாசிகள் உயர்ந்தவர்களாக ஆகிவிட்டார்கள். முன்பெல்லாம் பிராமணர் ராக்கி அணிவித்தனர். பிறகு ஜன்மாஷ்டமியில் (கிருஷ்ண ஜெயந்தியில்) அந்த ராக்கியை அவிழ்த்தார்கள். திரௌபதிக்காக இப்படி கூறுவார்கள், அவர் தலை முடியை அவிழ்த்து விட்டிருந்தார் என்று. ரிஷிமார்களுடைய ஜடைகளும் எப்பொழுதும் அவிழ்ந்து இருக்கும். பவித்திரமான மனைவியாக இருந்தால்

ஜடையை கட்டி வைப்பார். திரௌபதி ஜடையை அவிழ்த்திருந்தார், எதுவரை நமது இராஜ்யத்தைத் திரும்பப் பெறவில்லையோ, அதுவரை ஜடையைக் கட்டுவதில்லை என்று இருந்தார். இப்பொழுது குழந்தைகளான உங்களுக்கு அதன் அர்த்தம் மட்டும் புரிய வைக்கப்படுகிறது. எதுவரை நாம் சுய ராஜ்யத்தைப் பெறவில்லையோ அதுவரை சுகமான தூக்கத்தை தூங்கமாட்டோம். பாட்டும் இருக்கிறது இல்லையா? சுகம் அனுபவிப்பது இறை சட்டத்திற்கு விரோதம் (ஆராம் ஹராம்) என்ற பாட்டும் இருக்கிறது. எதுவரை சுயராஜ்யத்தைப் பெறவில்லையோ அதுவரை சுகம் எதற்கு? என்ற வேகம் உள்ளே இருக்க வேண்டும். சுகத்தை எதிர் காலத்தில் அடைய வேண்டும். அதற்கு முயற்சியை இப்பொழுது செய்ய வேண்டும். இப்பொழுது நீங்கள் அறிவீர்கள், ரக்ஷா பந்தனம் அதாவது தூய்மையாக இருப்பதற்காக, நாம் சபதம் செய்கிறோம். ராக்கி என்றால் சபதம் என்ற விஷயமாகும். இந்த பண்டிகை எப்போதிலிருந்து ஆரம்பமானது! ஏன் ஆரம்பமானது? இப்படி ராக்கி அணிவித்தல் என்ற யோசனையை வெளிப்படுத்துவதற்கு யார் முன்வந்தார்கள். யாரேனும் ஒருவர் யோசனையைக் கூறுவார், பிறகு அவருடைய பெயர் பரவி விடுகிறது. இது தூய்மையின் அடையாளமாகும். சகோதரி என்பவள் கன்னிகை. கன்னிகையர் கட்டுகிறார்கள். நீங்கள் கன்னிகைகள், இல்லற வாசிகளுக்குப் போய் கட்டுகிறீர்கள். குமார்கள். அவர்கள் இருப்பதே பாலகுமாரர்களாக! (பிரம்மாச்சாரி) எனவே சகோதரி சகோதரனுக்கு கட்டுகிறார். சகோதரன், குமாராக அல்லது கல்யாணம் ஆனவராக இருந்தாலும் கட்டுகிறார். திருமணமாகி பிறகு தூய்மையாக இருப்பது என்றால் மிகக் கடினம். பகவான் கூறுகிறார்: இது கடைசி பிறவி, பவித்திரமாக இருங்கள். ஆனால் அவ்வாறு ஆவதில்லை. எனவே சகோதரி குமாரராக இருக்கிற சகோதரனுக்கு ராக்கி கட்டி, இனி ஒருபொழுதும் விஷம் அருந்த மாட்டேன் என்று சபதம் செய்யும் படி கூறவும். முற்றிலும் விகாரி என்றால் விகாரத்தை விடமாட்டார். பகவானுடைய கட்டளையை கூட ஏற்கமாட்டார்கள். எனவே இப்படி குமார் - குமாரிகளுக்கு இடையில் சடங்கு நடைபெற்று வருகிறது. இந்த பண்டிகை சங்கமயுகத்தைச் சோந்தது என்பதை இப்பொழுது நீங்கள் புரிந்துள்ளீர்கள். சத்யுகத்தில் இருப்பதே எல்லோரும் தூய்மையாக. அங்கே ராக்கி கட்டுவதற்கு அவசியமேயில்லை. இந்த பழக்கம் சத்யுகத் திலிருந்து, நடந்து வருவதாக நினைக்கக்கூடாது. லட்சுமி-நாராயணருக்கு உற்சவமும் இப்பொழுது கொண்டாடுகிறார்கள். ஆனால் அதற்கு முக்கியத்துவம் இல்லை. கிருஷ்ண ஜெயந்தியைக் கொண்டாடுகிறார்கள், ஆனால் முதலில் கிருஷ்ணரை அப்படி யார் ஆக்கினார் என்பதைக் கூறும்படி கேளுங்கள். பாவம், அவர்களுக்குத் தெரியாது. இதையும் தெளிவுபடுத்தி எழுதவும். உற்சவங்கள் எல்லாம் இச்சமயத்தின் நிகழ்ச்சிகளாகும். சத்யுகத்தில் இப்படிப்பட்ட விஷயங்கள் கிடையாது. பண்டிகைகள் துவாபர் யுகத்தில் சற்று காலம் கழிந்த பின்னர் ஆரம்ப மாகின்றன. தீபாவளி உற்சவம் கூட சத்யுகத்தில் இங்கே கொண்டாடப்படுவதுபோல கொண்டாடப்படுவதில்லை. இங்கே கொண்டாடப்படுவதற்கு அர்த்தம் வேறாக இருக்கிறது. உற்வசத்திற்கு உரிய மதிப்பு எப்பொழுது இருந்தது என்பது புரிய வேண்டிய விஷயம்.. குழந்தை களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. உற்சவங்கள் இந்த சமயத்திற்குச் சொந்தமானதாகும். அதாவது சிவஜெயந்தி ஏற்பட்ட பிறகு பிற விழாக்கள் வருகின்றன. சிவஜெயந்திக்கு பிறகு வருவது ராக்கி. தூய்மையாக இருப்பதற்கு சபதம் எடுக்கிறார்கள். எப்படி? இது கடைசி பிறவி, பாரதத்தையும், உலகத்தையும் தூய்மை செய்வதற்காக நாம் தூய்மையாக

இருப்போம்.

குழந்தைகளுக்கு இந்த ரக்ஷா பந்தனம் மிகவும் முக்கியமானது. குழந்தைகளை நாம் ஒருபொழுதும் பதீதமாக (அழுக்காக) மாட்டோம் என்று சபதம் செய்ய வைக்கப்படுகிறது. இப்பொழுது நீங்கள் தூய்மை அடை கிறீர்கள். தூய்மையான குமாரிகளான உங்களுக்குத்தான் ராக்கி அணிவிக்க உரிமை இருக்கிறது. சகோதரர்கள் சதா பவித்திரமாக இருப்பதற்காக, ராக்கியை அணிவிக்க வேண்டும். மேலும் இல்லறவாசி களையும் தூய்மையாக இருக்க சபதம் எடுக்க செய்ய வேண்டும். எல்லோரும் அழைக்கிறார்கள், பதீத பாவனரே (தூய்மை செய்பவரே) வாருங்கள் என்று. யாரைப் பற்றி புகழ் இருக்கிறதோ, அவர் தான், அழுக்கிலிருந்து தூய்மை பெறுவதற்காக சபதம் எடுக்க வைக்கிறார். பாபா வந்து சபதம் எடுக்க வைக்கிறார். சிவ ஜெயந்திக்குப் பிறகு ரக்ஷாபந்தன் வரும். ஹோலி பண்டிகை ஞானமுள்ள பண்டிகை. துரியாவும், ஹோலியும் இந்த சமயத்தைச் சோந்தவை. ஹோலி என்றால் பவித்திரமாகுங்கள், துரியா என்றால் ஞானத்தை தாரணைச் செய்யுங்கள். ஆனால் பக்தியில், கல், மண், ஓடு. சாணம் என்று பலபல செய்து இன்னும் என்னவோ செய்கிறார்கள். இதை அழுக்கை தூய்மை செய்பவரான பாபாவே வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார்.

உயிருடன் வாழ்ந்து கொண்டு இறப்பவர்களில் கூட ஒரே பெற்றோருக்குப் பிறந்தவர் என்றும், மற்றாந்தாய்க்குப் பிறந்தவர் என்றும் இருக்கின்றார்கள். சொந்தக் குழந்தைகளுடைய கணக்கு அனைத்தும் கண்டிப்பாகப் பாபாவிடம் இருக்கும், தந்தை கண்டிப்பாக குழந்தை களுடைய தொழில் அல்லது வியாபாரம், சொத்து விபரம் எல்லாம் அறிந்திருப்பார். சொந்த குழந்தை என்பவருக்கு பாபாவிடம் முழு அன்பு இருக்கும். சொந்த குழந்தைகள் கூட வரிசைப் படி இருக்கிறார்கள். மற்ற குழந்தைகளும் வரிசைப்படி உள்ளனர். சிலர் கடமை தவறியவர் களாக, சிலர் நல்லவர்களாக இருக்கத்தான் செய்வார்கள். சிவஜெயந்தியும் சங்கமயுகத்தில் ஏற்படுகிறது. சங்கமயுகத்திற்கும் காலம் கொடுக்க வேண்டும். உதாரணமாக லீப் மாதம் இருக்கிறது. பிறகு லீப் நூற்றாண்டு (100 ஆண்டு கொண்டதும்) இருக்கிறது. லீப் நூற்றாண்டு மிகவும் உயர்ந்தது. இருபதாம் நூற்றாண்டு என்று கூறுவார்கள் இல்லையா? இதிலும் (கல்பத்திலும்) இது (லீப்) நூற்றாண்டு. இதில் பாபா வருகின்றார். இதை சங்கமயுக நூற்றாண்டு என்று கூறமுடியும். மேலும், கீழும் மாறுவதற்கு காலம் பிடிக்கும். தீபாவளியும் இப்போதைய நிகழ்ச்சியாகும். குழந்தைகள் அறிவார்கள். சிவஜெயந்திக்குப் பிறகு பவித்திரம் என்ற விஷயம் வருகிறது. பவித்திரத்துடன் ஞானம் யோகத்தின், ஹோலி, மற்றும் துரியா என்ற பண்டிகையும் வருகிறது. பாபாவின் நினைவு நன்றாக இருக்க வேண்டும். ஞானம் என்ற துரியாவும் நடைமுறையில் வருகிறது. ஞான மழை உங்கள் மீது பொழிந்து கொண்டேயிருக்கும். பவித்திரம் (தூய்மை) காரணமாகத் தான் சண்டை (போராட்டம்) நடக்கிறது. எல்லோரும் கூறுகிறார்கள், இது யார் வந்திருப்பது, வந்து குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டு பவித்திரமாக வாழ்ந்து காட்டுங்கள் என்று கூறுவது யார்? சன்னியாசிகள் தானாகவே வீட்டைத் துறந்து போய்விடுகின்றனர். கோபிசந்த் என்ற ராஜாவின் கதை கூட இருக்கிறது. அவரிடம் நீ ஏன் இராஜபோகத்தை விட்டாய் என்று கேட்கப்பட்டது? பகவானை சந்திப்பதற்காக விட்டேன் என்று கூறினார். இது பற்றி பாட்டும் நன்றாகப்

பாடுகின்றார்கள். இங்கோ இல்லற வாழ்க்கை யில் வசித்து கொண்டு பவித்திரமாக இருக்க வேண்டும். பவித்திரம் காரணமாக தகராறு ஏற்படுகிறது.

இப்பொழுது ரக்ஷா பந்தனம். பவித்திரமாக வாழ்ந்து, மற்றவரையும் அப்படி வாழ வைக்க கூடிய நினைவுச் சின்னமான பண்டிகை. இங்கே பாருங்கள், சின்ன சின்ன குழந்தைகளுக்கும் சாட்சாத்காரம் (காட்சி) ஏற்படுகிறது. இந்த சிறிய குழந்தைகள் என்ன பக்தி செய்தார்கள்? பாபா சட்டென்று எல்லோருக்கும் காட்சி கிடைக்கும்படி செய்து விடுகிறார். அதனால் இது மாயா வித்தை என்று நினைக்கிறார்கள். இதற்கு சிவபாபா வின் லீலை அல்லது வரலாறு என்ற பெயர் சொல்லப்படுகிறது. அவர்கள் உட்கார்ந்திருந்தாலும், புத்தியால் எங்கோ திரிகிறார்கள். இதையும் டிராமா என்று சொல்லலாம். ஒருவர் இன்னொருவரைப் பார்த்து, உடனே தியானத்தில் (சூட்சும உலகத்தில்) போய்விட்டனர். இந்த எல்லா லீலையும் (செயலும்) பரம்பிதா பரமாத்மாவினுடையது. கிருஷ்ணருடையது அல்ல. கிருஷ்ணருடைய பெயரை எழுதி, எல்லா வற்றையும் கெடுத்து விட்டார்கள். பகவானைப் பற்றி என்னென்னவோ எழுதி விட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் சத்யுக இளவரசர், ஆடைகளை அபகரித்தார், அதைச் செய்தார்.... இதைச் செய்தார்... இம்மாதிரியான வரலாறுகளை புகழ முடியாது. உலகத்தார் நினைக்கிறார்கள் கண்டிப்பாக கிருஷ்ணர் இதை எல்லாம் செய்திருப்பார் என்று. பிறகு கூறுகிறார்கள், கிருஷ்ணருடைய உடலில் ஆத்மா வந்திருக்க வேண்டும், அவர் ஞானம் கூறியிருக்கலாம். ஆனால் அப்படி நடக்க முடியாது. அவர் புகழ்வாய்ந்த இளவரசர் என்று சொல்கிறார்கள். பிறகு ரதத்தைக் காட்டி, அதன்மேல் கிருஷ்ணரைக் காட்டுகிறார்கள். குதிரை வண்டி ரதத்தில் அமர்ந்து பள்ளி கூடம் நடத்த முடியுமா என்ன? இது இராஜயோகப் பள்ளி. எங்கே யுத்த மைதானத்தை அவர்கள் காட்டி இருக்கிறார்கள்? எங்கே உங்களுடைய யுத்தம்? இது மாயா மீது வெற்றி அடைவதற்கான யுத்தம். இனி குழந்தைகள் ரக்ஷா பந்தனம் பற்றி புரிய வைக்க வேண்டும். ரக்ஷா பந்தனம் என்றால், தூய்மை செய்வதற்காக பரமபிதா பரமாத்மா வந்திருக்கிறார் என்பதாகும். நீங்கள் பிரம்மா குமாரிகள், புகழுக்குரியவர்கள். குமாரி என்பவள் 21 குலத்தை உயர்த்தக் கூடியவள். அது சங்கமயுகத்தில் உள்ள விஷயமாகும். இந்த பண்டிகை சத்யுகத்தில் நடைபெறாது. ராக்கி கட்டிய பிறகு கிருஷ்ண ஜெயந்தி வரும். கிருஷ்ண ஜெயந்தி வருகிறது என்றால், சத்யுகத்தில் முதல் நம்பர் பிறவி ஸ்ரீ கிருஷ்ணருடையது. ராஜதானியும் அவருடையதே. அவர் இச்சமயத்தில் சபதம் செய்கிறார், ஸ்ரீ கிருஷ்ணருடைய குலத்தில் செல்வதற்கு. இது இராஜயோகம். நீங்கள் நரனிலிருந்த நாராயணர் ஆகிறீர்கள். லட்சுமி-நாராயணருக்கு வாழ்க்கை வரலாறு இல்லை. இராதா கிருஷ்ணருடைய வாழ்க்கையே லட்சுமி நாராயணரின் வாழ்க்கை வரலாறு ஆகிறது. கிருஷ்ணருடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். சரி, நாராயணருடைய பிறந்த தினம் எங்கே? காரணம் இருக்க வேண்டும் இல்லையா? இராமரை, கிருஷ்ணருக்கு உயர்வாக திரேதாயுகத்தில் காட்டியிருக்கிறார்கள். கிருஷ்ணருக்கு 16 கலை, இராமருக்கு 14 கலை. இப்படி நாடகத்தையே குழப்பி விட்டார்கள். மதிப்பு முழுவதும் இங்கேயுள்ள விஷயத்தால் அமைந்திருக்கிறது. தீபாவளி சத்யுகத்திலிருந்து ஆரம்பித்தது, என்று நினைக்கக்கூடாது. சத்யுகத்தில் இருப்பது பவித்திரமான உலகம், அப்பொழுது அனைவருடைய ஆத்மாக்களும் விழித்திருக்கின்றன. உற்சவம் எல்லாம் இந்த சமயத்திற்கு (சங்கமயுகத்திற்கு) உரியவை.

இப்பொழுது நீங்கள், அனைவருடைய வரலாற்றையும் அறிவீர்கள். சிவபாபா தானே வந்து கூறுகிறார்: இப்பொழுது தூய்மை அடையுங்கள், ஆத்மா அழுக்காகி விட்டது. சன்னியாசி கூறுகிறார்: ஆத்மாவில் எதுவும் ஒட்டாது. ஆகவே அனேக மனிதர்கள் கூறுகிறார்கள், முட்டை, மீன் முதலியவைகளை உண்பதால் எந்த தவறும் இல்லை. விவேகானந்தர் மீன் சாப்பிட்டார். எனவே நாங்களும் சாப்பிடுகிறோம். ஒவ்வொருவருக்கும் பழக்க, வழக்கம் தனித்தனி இல்லையா? முன்னால் காளிக்கு மனிதர்களை பலியிட்டார்கள். சிவனை கருப்பர் என்று கூறுவதில்லை. சங்கரையும் கூறுவதில்லை. ஆனால் பிரம்மா, விஷ்ணு இருவருடைய உருவங்கள் வெள்ளையிலிருந்து கருப்பாக மாறுகின்றன. இதை எல்லாம் பாபா வந்து புரிய வைக்கின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவும் காலை வணக்கமும், ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாபாவிடம் முழுமையான அன்பு வைத்து, சொந்த குழந்தை ஆகவும், தன்னுடைய முழுமையான செய்திகளை பாபாவுக்கு கொடுக்கவும். ஒருபொழுதும் தகுதியற்ற (கெட்ட) குழந்தை ஆகக்கூடாது.

2. ரக்ஷா பந்தனத்தின் சரியான ரகசியத்தைப் புத்தியில் வைத்து, கண்டிப்பாக தூய்மை யாகவும். மாயாவிடம் ஒருபொழுதும் தோற்றுவிடக் கூடாது. பவித்திரத்தின் சக்தியால், சுயராஜ்யத்தை அடைய சபதம் செய்யவும்.

வரதானம் : சதா சந்திப்பின் ஊஞ்சலில் ஆடக்கூடிய தத்தத்வம் என்ற வரதானத்தைப் பெற்றவராக தந்தைக்கு சமமானவராக ஆகுக.

எவ்வாறு பாப்தாதா எஜமானர்களாகிய உங்களுடைய கட்டளையை ஏற்றுக் கொண்டு சந்திப்பைக் கொண்டாடுவதற்காக வருகின்றார்களோ, வந்தேன் ஐயா என்ற பாடத்தைப் படித்து ஆஜராகிவிடுகின்றார்களோ, அதுபோலவே தத்தத்வம் (உங்களுக்கும் அது பொருந்தும்). அமிர்த வேளையில் இருந்து பகல் முடிவடையும்வரை தர்மம் மற்றும் கர்மத்தில் தந்தைக்கு சமமானவர் ஆகுங்கள், அப்பொழுது சதா சந்திப்பு என்ற ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இருப்பீர்கள். இந்த சந்திப்பு என்ற ஊஞ்சலில் இருப்பதனால் இயற்கை மற்றும் மாயை ஆகிய இரண்டுமே உங்களுடைய ஊஞ்சலை ஆட்டக் கூடிய பணியாட்கள் ஆகிவிடும். அனைத்து பொக்கிசங்களும் உங்களுடைய இந்த சிரேஷ்டமான ஊஞ்சலுடைய அலங்காரம் ஆகிவிடும்.

சுலோகன்: சதா பிரம்மா பாபாவின் புஜங்களில் நிறைந்திருந்தீர்கள் என்றால் பாதுகாப்பின் அனுபவம் செய்வீர்கள்.